இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 167 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 14 – திங்கள்கிழமை 27 ஜனவரி 2025 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 167 : Thiruvalluvar Year - 2056 - Thai 14 - Monday 27 January 2025 - Madurai 12 + 8 Pages ₹ 5.00






சென்னை, காமராசர் சாலையில் நேற்று (26.1.2025) நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினை பார்வையிட்டார்கள். இந்த நிகழ்வின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நீதியரசர் கே.ஆர்.ஸ்ரீராம், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், முதல்வரின் துணைவியார் சாந்தா ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ். ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 76வது குடியரசு தின விழா: சென்னையில் கோலாகலம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஆளுநர் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்!

**சென்னை, ஜன. 27-**

**குடியரசு தினத்தையொட்டி சென்னை கடற்கரை சாலையில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தேசியக் கொடியை ஆளுநர் ஆர்.என்.ரவி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.**

**நாட்டின் 76வது குடியரசு தினம் நேற்று நாடு முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட்டது. இதன் ஒரு பகுதியாக சென்னை மெரினா காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர், முப்படைகளின் மூத்த அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.**

தமிழக அரசின் சார்பில் குடியரசு தின விழா மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகில் நேற்று காலை நடைபெற்றது.

இவ்விழாவில் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, முதல்வரின் துணைவியார் சாந்தா ஸ்டாலின், அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள், வெளிநாட்டு தூதுவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டார்கள்.

இந்த விழா நடக்கும் பகுதிக்கு காலை 7.52 மணிக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தந்தார்.

அவரது காரின் முன்னும் பின்னும் மோட்டார் சைக்கிள்களில் போலீசார் அணிவகுத்து வந்தனர்.

இதைத் தொடர்ந்து முதல்வரை தலைமைச்செயலாளர் முருகானந்தம் வரவேற்றார்.

தொடர்ந்து காலை 7.54 மணிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி வந்தார். 7.58 மணிக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

பிறகு காலை 8 மணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேசியக் கொடியை ஆளுநர் ஆர். என்.ரவி அவர்கள் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். அப்போது அங்கு இந்திய விமான படை ஹெலிகாப்டர் பறந்து வந்து மலர்களை தூவியது.

அந்த நேரத்தில் தேசிய கீதமும் இசைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆளுநர் ரவி, முப்படைகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றார். விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது வழங்கினார்.

காந்தியடிகள் காவலர் பதக்கம் 5 காவலர்களுக்கு வழங்கப்பட்டது. காந்தியடிகள் காவலர் பதக்கத்தை விழுப்புரம் மண்டல மத்திய நுண்ணறிவு பிரிவு காவல் ஆய்வாளர் கே.சின்னகாமணன், விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய தலைமை காவலர் மகாமார்க்ஸ், திருச்சி மாவட்டம் துறையூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு தலைமை காவலர் கா.கார்த்திக், சேலம் ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர்கள் கா.சிவா, பா.பூமாலை ஆகியோருக்கும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சர் விருதின் முதல் பரிசு மதுரை மாநகரத்தைச் சேர்ந்த C3 காவல்நிலையத்திற்கும், இரண்டாம் பரிசு திருப்பூர் மாநகரத்தைச் சேர்ந்த திருப்பூர் வடக்கு காவல் நிலையத்திற்கும், மூன்றாம் பரிசு திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி காவல் நிலையத்திற்கும் முதல்வர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளின் சார்பில் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நடைபெற்றது.



நேற்று (26.1.2025) சென்னை, காமராசர் சாலையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ‘டங்ஸ்டன்’ கனிம வள சுரங்கத் திட்ட ஏல அறிவிப்பு ரத்து!

# முதல்வருக்கு அரிட்டாபட்டி மக்கள் நெஞ்சார்ந்த நன்றி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் சிறப்புரை!

**மதுரை, ஜன. 27 -**

**அரிட்டாபட்டி பகுதியில், டங்ஸ்டன் ஏலத்தை ரத்து செய்வதாக ஒன்றிய அரசு அறிவித்த நிலையில், மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.**

**இவ்விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.**

மதுரை அரிட்டாபட்டி பகுதியில் டங்ஸ்டன் சுரங்கம் அமைப்பதற்கான ஒன்றிய அரசின் ஏல அறிவிப்பை ரத்து செய்யக்கோரி அரிட்டாபட்டி, வெள்ளாளம்பட்டி, நரசிங்கம்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராம மக்கள் போராட்டம் நடத்தினர். மேலும், டங்ஸ்டன் ஆலைக்கான ஏலத்தை ரத்து செய்ய வலியுறுத்தி சட்டப் பேரவையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களால் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றி, ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது.

அப்போது பேரவையில் பேசிய முதல்வர் ஸ்டாலின் அவர்கள், நான் முதல்வராக இருக்கும் வரை டங்ஸ்டன் சுரங்கத் திட்டம் வராது என்று ஆணித்தரமாக அறிவித்தார்.

இந்நிலையில், டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை ரத்து செய்வதாக அண்மையில் ஒன்றிய அரசு அறிவித்தது.

இதற்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்த நிலையில், அரிட்டாபட்டியைச் சேர்ந்த போராட்டக் குழுவினர் 32 பேர், அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் சந்தித்து நன்றி தெரிவித்தனர். மேலும், டங்ஸ்டன் சுரங்கம் தொடர்பான முதல்வரின் நடவடிக்கைகளுக்கு நன்றி மற்றும் பாராட்டுத் தெரிவிப்பதற்காக விழா எடுப்பதாகக் கூறி, அழைப்பிதழை வழங்கினர்.

இதுகுறித்து டங்ஸ்டன் போராட்டக் குழுவைச் சேர்ந்த பழனியாண்டி கூறும்போது,

“ஒன்றிய அரசு கொண்டுவந்த டங்ஸ்டன் திட்டத்தால் எங்கள் பகுதியே பாலைவனம் ஆகிவிடும் என்பதை உணர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்டோம். இது தொடர்பாக சட்டப் பேரவையில் தீர்மானம் இயற்றியதுடன், ‘நான் முதல்வராக இருக்கும் வரை திட்டம் வர விட மாட்டேன்’ என்று முதல்வர் உறுதியளித்தார். இதற்குப் பிறகே இத்திட்டத்தை ஒன்றிய அரசு கைவிட்டுள்ளது.

இதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தோம். ஜன. 26ம் தேதி (நேற்று) அரிட்டாபட்டிக்கு முதல்வர் வருகிறார். சென்னையில் குடியரசு தின விழாவில் பங்கேற்ற பின்னர், மதுரை வரும் முதல்வர், அரிட்டாபட்டியில் நடைபெறும் நன்றி தெரிவித்தல் மற்றும் பாராட்டு விழாவில் பங்கேற்கிறார்” என்றார்.

இதனைத் தொடர்ந்து மதுரை அரிட்டாபட்டியில் நடைபெறும் பாராட்டு விழாவில் பங்கேற்பதற்கு நேற்று முதல்வர் அவர்கள் புறப்பட்டார். மதுரை விமான நிலையத்தில் அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த வரவேற்பில் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர், தொண்டர்கள் மற்றும் அரிட்டாபட்டியைச் சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து அரிட்டாபட்டியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுச்சி உரையாற்றினார்.

இதில் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், போராட்டக் குழுவினர் மற்றும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இதற்கிடையே அரிட்டாபட்டி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்கள், டங்ஸ்டன் திட்டத்தை விரவிடாமல் தடுத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, மதுரை நகரம் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டி தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.